# ஜனநாயக விரோத - சமூக நீதிக்கு எதிரான - ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல்திட்டக் குழு தீர்மானம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

செயல்படுத்தாமல் இருப்பது உள்ளிட்ட சமூகநீதிக்கு எதிரான நடவடிக்கைகள் போன்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோத - மக்கள் விரோத - அரசியல் சட்டவிரோதச் செயல்பாடுகளுக்கு இந்த உயர்நிலைச் செயல்திட்டக் குழுக் கூட்டம் கடும் கண்டனங்களைத் தெரிவிக்கிறது.

2014 தேர்தலுக்கு முன்னதாகக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் பத்தாண்டுகளாக நிறைவேற்றாமல் - அதற்கான எந்த முன்முயற்சியும் எடுக்காமல் மந்த நிலைமையில் ஒன்றிய அரசு இருக்கிறது. இந்திய நாட்டின் அனைத்துத் தார்மீக அறநெறி - அரசியல் சட்டக் கோட்பாடுகளையும் மதிக்காமல், தங்கஎதுவகுப்புவாதச்சிந்தனைகளை மட்டும் செயல்படுத்தும் அரசாக பா.ஜ.க. அரசு இருக்கிறது. இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைக்கும் சிந்தனைகளைத் தள்ளி வைத்து, இந்தியாவின் அனைத்துத் தர மக்களுக்கும் குறைந்தபட்ச நன்மைகளைச் செய்யும் செயல்களை மூன்றாவது முறை மக்களால் தனிப் பெரும்பான்மை வழங்கப்படாத தேர்தல் முடிவுகளுக்குப் பின்னராவது செய்ய வேண்டும்.

**தீர்மானம் : 3**

### மீனவர்கள் நலன்களைக் காப்பீர்!

இலங்கையில் செப்டம்பர் மாதம் அதிபர் தேர்தலும், இந்த மாதம் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற்று அதிபர் அனுர குமார திசநாயக தலைமையில் - மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்ட பெரும்பான்மையுடன் 'தேசிய மக்கள் சக்தி கட்சி' கூட்டணியின் புதிய அரசு அமைந்துள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாட்டு மீனவர்கள் கைது, படகு பறிமுதல், அபரிமிதமான அபராதத் தொகை, சிறைத் தண்டனை, மீனவர்கள்மீது தாக்குதல் ஆகியவை தொடர்ந்து நடந்து வருகிறது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இந்த நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையிலும், மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடும் வகையிலும் இலங்கையில் அமைந்துள்ள புதிய அரசிடம் இப்போதாவது ஒன்றிய பா.ஜ.க. அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கைச் சிறையில் வாடும்தமிழ்நாட்டுமீனவர்களை விடுதலை செய்யவும், இலங்கைக் கடற்படை பறிமுதல் செய்துள்ள படகுகளைத் திரும்ப பெறவும், ஒன்றிய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இலங்கைத் தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, இலங்கையின் புதிய அரசிடம் வலியுறுத்தி உறுதி செய்ய வேண்டும்.

**தீர்மானம் : 4**

### மணிப்பூர் தீயை அணைப்பீர்!

கடந்த 18 மாதங்களாக மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது. மனித உரிமைகள் பறிக்கப்பட்டு - மனித நேயம் நசுக்கப்பட்டு - மனித பெருந்துயரமே அம்மாநிலத்தை ஆட்டிப் படைக்கிறது. எங்கு பார்த்தாலும் போராட்டம், வன்முறை, தீ வைப்பு, மக்கள் பிரதிநிதிகள் மீது தாக்குதல், கலவரம் எனச் சட்டம் ஒழுங்கும் பொது அமைதியும் வரலாறு காணாத வகையில் சீர்குலைந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. அப்பாவிக் குழந்தைகள், கைக்குழந்தைகள், பெண்கள் ஈவு இரக்கமின்றி கொலை செய்யப்படுவது என மனித நடமாட்டமே அற்றுப் போகுமளவிற்கு அராஜகத்தின் உச்சத்தில் பாதிக்கப்பட்டு இருக்கும் மணிப்பூர் மாநிலத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு திரும்பிப் பார்க்ககூட நேரமின்றித் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. மேலும், இதுவரை பிரதமர் மோடி அவர்கள் ஒரு முறை கூட மணிப்பூர் மாநிலத்திற்குச் செல்லாதது கண்டிக்கத்தக்கதோடு;

மணிப்பூர் மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் மணிப்பூரைக் கை கழுவி விட்டதாகவே தெரிகிறது. இரண்டு அரசுகளின் அலட்சியத்தின் காரணமாக இன்னும் எத்தனை உயிர்களை இழக்கப் போகிறோம் என்ற கேள்வி எழுகிறது.

இனியும் வேடிக்கை பார்க்காமல் - மணிப்பூர் மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்து - மனிதநேயம் உயிர்பெற ஒன்றிய பா.ஜ.க. அரசு - குறிப்பாக, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் : 5**

### மாநில அரசுக்கான நிதி உரிமையை நிலை நிறுத்துக!

மாநிலங்களின் அதிகாரத்திற்காகக் குரல் கொடுத்த முதல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த வழியில் நின்று தற்போது 16-ஆவது நிதிக் குழுவிடம் மாநில நிதி உரிமைக்காக ஆட்சி சார்பிலும், கட்சி சார்பிலும் வலுவான வாதங்களை எடுத்து வைத்துள்ள கழகத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அவர்களுக்கு இந்தக் குழு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

'ஒன்றிய வருவாயில் மாநில அரசுக்கு 50 விழுக்காடு நிதிப் பகிர்வை அளிக்க வேண்டும், ஒன்றிய - மாநில அரசுகள் இணைந்து நடத்தும் திட்டங்களுக்கு 50 விழுக்காடு நிதியை ஒன்றிய அரசு தர வேண்டும்' என்பது உள்ளிட்ட ஆணித்தரமான கருத்துக்களை எடுத்து வைத்து இன்றைக்கு 16-ஆவது நிதிக்குழுவின் தலைவர் "தமிழ்நாடு அரசின் சார்பில் Masterclass Presentation செய்யப்பட்டிருக்கிறது" என முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நிர்வாகத் திறன்மிக்க அரசைப் பாராட்டியிருப்பதைப் பெருமிதத்துடன் இந்தக் கூட்டம் பதிவு செய்கிறது. முதலமைச்சரின் கோரிக்கைகளை வழிமொழிந்த அனைத்துக் கட்சிகளுக்கும் இந்தக் கூட்டம் நன்றி செலுத்துகிறது.

தமிழ்நாட்டின் கோரிக்கைகள் 16-ஆவது நிதிக்குழுவின் அறிக்கையில் முழுமையாக இடம்பெற வேண்டும் என்றும், அதனை ஒன்றிய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

**தீர்மானம் : 6**

### சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராவோம்!

அன்னைத் தமிழ்நாட்டை உயர்த்தவும், அகில இந்தியா முழுமைக்கும் கூட்டாட்சி அரசை மலர வைக்கவும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் பவள விழாவைக் கண்டு கம்பீரமாக வளர்ந்து வருகிறது. ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்ட கழகத்துக்கு ஆறாவது முறையாக ஆட்சி செய்யும் வாய்ப்பைத் தமிழ்நாட்டு மக்கள் வழங்கினார்கள்.

தேர்தலுக்கு முன் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியும், சொல்லாத பல திட்டங்களை நிறைவேற்றியும் வளமான தமிழ்நாட்டைக் கழக அரசு உருவாக்கி வருகிறது.

இனி எந்நாளும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் தமிழ்நாட்டை ஆளும், ஆள வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் நம்பிக்கையுடன் சொல்லி வருகிறார்கள். பயனடைந்தவர் சொல்லும் பாராட்டும், பயனாளிகளின் மனநிறைவும் சேர்ந்து 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. ஆட்சியை மீண்டும் மலர வைக்கும் என்பதில் அய்யமில்லை.

இந்நிலையில் கழக அரசின் சாதனைகள் - திட்டங்கள் - முதலமைச்சரின் அர்ப்பணிப்புடன் கூடிய செயல்பாடுகள், தொலைநோக்குப் பார்வைகள் அனைத்தையும் மக்களுக்கு நினைவூட்டுவதன் மூலமாகத் தேர்தல் பரப்புரையை இப்போதே தொடங்குங்கள் என்று கழக உடன்பிறப்புகள் அனைவரையும் இந்த உயர்நிலைச் செயல்திட்டக் குழு கேட்டுக் கொள்கிறது.

கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்பும், ஒரு இயக்கம் என்று சொல்லத்தக்க வகையில் இன்று முதல் தேர்தல் பரப்புரைப் பணிகளைத் தொடங்குங்கள். துண்டுப் பிரசுரங்கள் - திண்ணைப் பிரச்சாரங்கள் என மக்கள் இயக்கத்தைத் தொண்டர்கள் அனைவரும் தொடங்குங்கள். ஏழாவது முறையும் ஏற்றம் காண்போம் என்று கோடிக்கணக்கான தொண்டர்களது உள்ளத்துக்கு அன்பான வேண்டுகோளை இந்த உயர்நிலைச் செயல்திட்டக் குழு முன்வைக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தமிழ்நாட்டின் கோரிக்கைகள் 16–வது நிதிக் குழுவின் அறிக்கையில் முழுமையாக இடம்பெற வேண்டும்!

**மணிப்பூர் மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் மணிப்பூரைக் கை கழுவி விட்டதாகவே தெரிகிறது. இரண்டு அரசுகளின் அலட்சியத்தின் காரணமாக இன்னும் எத்தனை உயிர்களை இழக்கப் போகிறோம் என்ற கேள்வி எழுகிறது.**

**இனியும் வேடிக்கை பார்க்காமல் - மணிப்பூர் மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்து - மனிதநேயம் உயிர்பெற ஒன்றிய பா.ஜ.க. அரசு - குறிப்பாக, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.**

## தமிழ்நாட்டு மீனவர்கள் நலனைக் காத்திடுவீர்!

---

### பாகிஸ்தான் கடற்படையினரால் சிறை பிடித்துள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் 7 பேர் உள்பட

# 14 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

புதுடெல்லி, நவ. 21 -

**பாகிஸ்தான் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களை உள்ளடக்கிய 14 இந்திய மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களுடன் சேர்த்து 14 இந்திய மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற போது 03.01.2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 14 இந்திய மீனவர்கள் (7 மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்) குஜராத்தின் போர்பந்தரில் இருந்து INDGJ25MM3458 மற்றும் INDGJ25MM1582 என்ற பதிவெண்கள் கொண்ட இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்றபோது 03.01.2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு ஏறக்குறைய 10 மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மீனவர்களின் தற்போதைய நிலை குறித்தோ, அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்தோ எவ்விதத் தகவலும் இல்லை என முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக நீண்டகாலமாக நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என்றும் பொருளீட்டும் மீனவர்கள் இல்லாததால் அவர்களைச் சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்கள் மிகுந்த மனவேதனையுடன் உள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கடற்படையினரால் நீண்டகாலமாக சிறையிலடைக்கப்பட்டுள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் விடுவிக்க உறுதியான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

---

### திண்டுக்கல் மாவட்டத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள்!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி - அர.சக்கரபாணி வழங்கினர்!

*திண்டுக்கல், நவ.21-*

*71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா திண்டுக்கல்லில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார். அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர.சக்கரபாணி கலந்து கொண்டு மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிழ்கள் மற்றும் கேடயங்கள், 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை வழங்கினர். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*விழாவில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக, மகளிர் சுயஉதவிக்குழு கடனாக (116 குழுக்கள்- 1,426 பயனாளிகள்) ரூ.9.33 கோடி, கே.சி.சி.பயிர்க்கடனாக 1,782 பயனாளிகளுக்கு ரூ.26.71 கோடி, கால்நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக்கடன் 307 பயனாளிகளுக்கு ரூ.1.87 கோடி, மாற்றுத்திறனாளிகள் கடன் 17 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம், சிறு வணிகர்கள் கடன் 26 பயனாளிகளுக்கு ரூ.29.00 இலட்சம், மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் வாயிலாக, மகளிர் சுய உதவிக்குழு கடன் (76 குழு 913 பயனாளிகள்) ரூ.5.55 கோடி, மாற்றுத்திறனாளிகள் கடன் 36 பயனாளிகளுக்கு ரூ.17.00 இலட்சம், கைம்பெண்கள் கடனுதவி 20 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம், சிறுவணிகக் கடனுதவி 104 பயனாளிகளுக்கு ரூ.40.00 இலட்சம், நாட்டுப்புறக் கலைஞர்கள் கடன் 5 பயனாளிகளுக்கு ரூ.3.00 இலட்சம், என ஆக மொத்தம் 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.*

*விழாவில், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதி ரூ.46.89 இலட்சம், கூட்டுறவு கல்வி நிதி (2023 - 2024 ஆண்டு) ரூ.31.26 இலட்சம், கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப்போட்டி, பேச்சு மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி, கூட்டுறவு சங்கங்கள், பணியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் என 68 நபர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை அமைச்சர்கள், இ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் வழங்கினர்.*

*இவ்விழாவில், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் இரா.சுபாஷினி, திண்டுக்கல் மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் ரா.ஆனந்த், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) எஸ்.ராஜா, கூட்டுறவு துணைப்பதிவாளர்கள் பி.உஷாநந்தினி, இரா.வெங்கட்லட்சுமி, இரா.அன்புக்கரசன், பா.கௌரி மீனா, தொ.ரா.வசந்தி, இரா.தே.பவணந்தி, திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பொது மேலாளர் க.வாணிஸ்வரி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி பொதுமேலாளர் ஜி.விநாயகமூர்த்தி, கூட்டுறவு சார் பதிவாளர்கள் ம.செல்வக்குமார், கு.அன்பரசு, நா.மதி மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.*